**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129853

1. District : மாவட்டம் திருச்சி  PS: காவல்நிலையம் VAAC  Year: ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண் 7  Date: நாள் 28.05.24

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as ammended in - 2018)  Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.05.24  Date from : நாள் முதல் 11.30 hrs  Date to : நாள் வரை —
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.05.24  Time : நேரம் 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —  Time : நேரம் —

4. Type of Information : Written/ ~~Oral~~ :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய்மொழியாக~~ கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 4 K.m தென்மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி உதவி செயற்பொறியாளர் (இ.கா) அலுவலகம் TANGEDCO, கிராப்பட்டி, திருச்சி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் த. மரிய அந்தோணி பிரசாத்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தாவீதையன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.07.1966  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் எலக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் காண்ட்ராக்டர்  (g) Address : முகவரி No.23, R.M.S. காலனி (தெற்கு) எடமலைப்பட்டிபுதூர், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு அன்பழகன், கமர்சியல் அசிஸ்டெண்ட், உதவி செயற்பொறியாளர் (இ.கா) அலுவலகம், TANGEDCO, கிராப்பட்டி, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 28/05/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 28/05/24.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 28.05.2024

Name: பெயர் ... G. [signature] ...
Rank: நிலை ... D.S.P./VAC ... No. எண் ..........

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், இன்று 28.05.2024 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி, எடமலைப்பட்டிப்புதூர், ஆர்.எம்.எஸ். காலனி (தெற்கு), என்ற முகவரியில் வசித்து வரும் தங்கையன் மகன் மரிய அந்தோணி பிரசாத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, கிராப்பட்டி, தமிழ்நாடு மின்சார வாரியம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் கமர்சியல் அசிஸ்டென்டாக பணிபுரியும் திரு.அன்பழகன் மற்றும் புகார்தாரர் திரு.மரியஅந்தோணி பிரசாத் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து புகார்தாரர், குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆகியோர்களின் முன் நடத்தைகளை உறுதி செய்து கொண்டு, இன்று 28.05.2024 காலை 08.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.07/2024 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. நாள்–28.5.2024 அனுப்புநர் த.மரிய அந்தோணிபிரசாத், வயது 48/24, த/பெ.தங்கையன், எண்.23, ஆர்.எம்.எஸ்.காலனி (தெற்கு), எடமலைப்பட்டிப்புதூர், திருச்சி–12. பெறுநர் உயர்திரு. லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. அய்யா, நான், திருச்சி எடமலைப்பட்டிப்புதூரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ITI எலெக்ட்ரிக்கல் படிப்பு முடித்துவிட்டு, எலெக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் வேலை செய்வதற்கான அரசு உரிமம் பெற்றுள்ளேன். அதாவது, புதிய கட்டிடம் கட்டும் வீட்டு உரிமையாளர்களின் அனுமதியின்பேரில், கட்டிடத்திற்கு உண்டான எலெக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் வேலைகள் தொடர்பான அனைத்து பணிகளையும் ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுப்பேன். அந்தவகையில், திருச்சி கிராப்பட்டி அன்புநகர் விரிவாக்கத்தில் புதிதாக வீடு கட்டிவரும் திரு.முகமது அப்துல்லா என்பவர் அவரது புதிய வீட்டிற்கான எலெக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் வேலைகளை நான் செய்து கொடுக்குமாறு என்னிடம் கேட்டிருந்தார். அதன்படி அவரது வீட்டு எலெக்ட்ரிக்கல் வேலைகளை செய்து கொடுத்துக் கொண்டிருந்தேன். அவரது வீட்டிற்கு அவரது மனைவி திருமதி.தாஹிரா சுல்தானா என்பவரின் பெயரில் தற்காலிக மின் இணைப்பு எண்.221–010–1099–ம் பெற்றுக் கொடுத்திருந்தேன். மேற்படி வீட்டின் முன்பக்கத்தில் மின்வாரியத்தின் உயர் அழுத்த மின்கம்பம் ஒன்று மிகவும் இடையூறாக இருந்து வந்த காரணத்தால், அந்த உயர் அழுத்த

மின் கம்பத்தினை சற்றுதள்ளிப்போட வேண்டுமாறும் அதற்கும் நானே முழு நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென மேற்படி முகமது அப்துல்லா என்னிடம் கேட்டுக் கொண்டார். எனவே, நான் அதற்காக TANGEDCO ஆன்லைன் மூலம் DCW-Works/HT/others- என்ற பணிக்காக முகமது அப்துல்லா பெயரில் ரூ.2,413/= பணத்தை கடந்த 15.4.2024 அன்று செலுத்திவிட்டு அதன் ரசீதினை அன்றே எடுத்துக் கொண்டு, திருச்சி கிராப்பட்டியில் உள்ள சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (இயக்குதலும் காத்தலும்), கிராப்பட்டியில் உள்ள அலுவலகத்திற்கு சென்று அங்கு இது சம்மந்தமாக பணிகளை கவனிக்கும் கமர்சியல் அசிஸ்டென்ட் அதாவது CA திரு.அன்பழகன் என்பவரை சந்தித்து அவரிடம் கொடுத்து விபரத்தை சொன்னேன். அதற்கு அன்பழகன் எஸ்டிமேட் போட்டுவிட்டு உங்களை கூப்பிடுகிறேன் என்று கூறினார். பிறகு சுமார் 20 நாட்கள் கழித்து ஒரு நாள் மின்வாரிய அலுவலர்கள் வந்து ஃபீல்டு விசிட் பார்த்துவிட்டு சென்றதாகவும், வந்தவர்கள் என்னை ஆபீசில் வந்து பார்க்கச் சொன்னார்கள் என்று முகமது அப்துல்லா என்னிடம் தெரிவித்தார். அதன்பேரில் இரண்டு நாட்கள் கழித்து, நான் கிராப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று எஸ்டிமேட் தயாரிக்கும் CA அன்பழகன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் உங்க DCW வேலை சம்மந்தமா எஸ்டிமேட் போட்டுட்டேன் மொத்தம் 35 ஆயிரம் வருகிறது அதனை ஆன்லைனில் கட்டிவிடுங்கள் என்று கூறியதன்பேரில், அந்த விபரத்தை மேற்படி முகமது அப்துல்லாவிடம் தெரிவித்துவிட்டு அவரிடம் இருந்து பணத்தினை பெற்று கடந்த 13.5.2024 அன்று ரூ.35,612/– தொகையை ஆன்லைன்மூலம் செலுத்துவிட்டு, அதன் இரசீதினை மேற்படி அன்பழகன் அவர்களிடம் கொடுத்தேன். அதற்கு அவர் 15 நாட்கள் கழித்து என்னை வந்து பாருங்கள் என்று சொல்லியிருந்ததன்பேரில், நான் நேற்று (27.5.2024) காலை சுமார் 11.30 மணிக்கு மேற்படி கிராப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று CA அன்பழகன் அவர்களை சந்தித்து எனது DCW வேலை சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர், உங்க வொர்க்குக்கு ஃபைல் ரெடி பண்ணி மெட்டீரியல் வாங்கணும், அதெல்லாம் நான்தான் பாக்கனும், அதனால கன்சூமர்கிட்டயிருந்து ருபதாயிரம் வாங்கிட்டு வந்து கொடுத்தீங்கன்னா, உங்க வீட்டு முன் இருக்கும் EB போஸ்ட்டை சீக்கிரம் Shift பண்ணி கொடுத்திருவேன் என்று கூறினார். அதற்கு நான் ஏற்கனவே DCW வேலைக்கு கன்சூமர்கிட்டயிருந்து 35 ஆயிரம் வாங்கி கவர்மெண்ட் பீஸ் கட்டிட்டேன், அப்புறம் இது எதுக்கு சார் என்றேன். என்ன பிரசாத், இந்த பீல்டுலேயே இருக்கீங்க, ஒன்னும் தெரியாத மாதிரி கேக்கிறீங்களே என்று கூறிவிட்டு, உங்க வொர்க்க முடிச்சி கொடுக்கத்தான் என்றார். அதற்கு நான் அவ்ளோ பணமெல்லாம் கன்சூமர்கிட்ட கேக்க முடியாது சார் என்றேன். அதற்கு அவர் அப்படின்னா 5000 ரூவா கொறச்சிகிட்டு, 15,000–ம் கொடுத்தீங்கன்னா உங்க வேலைசீக்கிரமா முடியும், இல்லன்னா நானா பாத்து

பண்ணும்போதுதான் என்று கண்டிப்பாக கூறினார். நான் என்ன செய்வதென்று தெரியாமல், அப்போதைக்கு அவரிடம் சரிங்க சார் கன்சூமர்கிட்ட கேட்டு பணத்தவாங்கிட்டு வந்து தருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. நான் முகமது அப்துல்லாவை சந்தித்து அன்பழகன் லஞ்சம் கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் அன்பழகன் கேட்ட லஞ்சப்பணத்தை கொடுக்க வேண்டாம், நீங்க விஜிலன்ஸ் போய் புகார் கொடுத்து நடவடிக்கை எடுங்க என்று கூறிவிட்டார். DCW வேலைக்காக என்னிடம் **15,000/-** ரூபாய் லஞ்சம் கேட்ட திருச்சி கிராப்பட்டி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் CA அன்பழகன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (T.மரியஅந்தோணி பிரசாத்) 28/05/2024 Submitted to the Court of the Hon'ble Special Judge, Special court for the Prevention of Corruption Act Cases, Trichy. Received this report at 07.00 hrs on 28.05.2024 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.07/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.30 hrs on 28.05.2024. Sd.xxx (G.MANIKANDAN) 28.05.2024 Deputy Supdt. of Police, V&AC, Trichy.

28/5/24
(G.MANIKANDAN)
Dy. Supdt. of Police.
V&AC. Trichy.